(6)

4

பராமரிப்பு பகுதி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கிளிநொச்சி பிரிவு
03.06.2016

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஊடாக...
பிரதிப் பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கிளிநொச்சி பிரிவு.

M. Mageshalingam
Deputy Registrar
Gen. Administration
Kilinochchi Premises
University of Jaffna

**ஒழுக்கயீனம் தொடர்பானது**

பராமரிப்பு பகுதியின் கிளிநொச்சி பிரிவின் மேற்பார்வையாளராக கடைமையாற்றும் க.ஜனாதீபன் என்பவர் 30.05.2016அன்று காலை 7.30 மணியளவில் பிரதிப்பதிவாளர் அலுவலகதில் கையொப்பம் இட்டுவிட்டு அங்குள்ள பணியாளரிடம் வேலைகள் பொறியியளாளரிடம் யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதி பெற்றதாகவும், யாழ்ப்பாணம் செல்லப்போவதாகவும், கூறிவிட்டு சென்றுள்ளார். இவ்விடயத்தை கேள்வியுற்ற நான் பராமரிப்பு கிளையின் பணியாளர்கள் மூலம் பல்கலைக்கழகத்தின் வளாகத்தினுள் அவரை தேடினோம். ஆனால் அவரை காணவில்லை அதன் பின்பு 9.30 மணியளவில் மதுபோதையில் அலுவலகத்திகு சமூகமளித்து விடுமுறை தருமாறு அனுமதி கேட்டார். நான் அவரின் விடுமுறையை அனுமதிக்க முடியாது என கூறியதுடன் பிரதிப் பதிவாளரிடம் செல்லுமாறு பணித்தேன். அவர் எனது பேச்சை செவிமடுக்காமல் அலட்சியமாக சென்று மாணவர்கள் விடுதிக்கு தளபாடம் இறக்க வந்த பாரஊர்தியில் உறங்கினார். அதன் பின்பு பராமரிப்பு பகுதியின் பணியாளர்கள் ஓய்வெடுக்கும் அறையினுள் சென்று உறங்கினார். இத்தகைய செயற்பாடனது தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. இவருக்கு இவ்வாறான செயற்பாடுகளுக்கு நான் பல தடவைக்கு மேல் எச்சரித்தும் அவர் எனது கட்டளையை ஏற்று நடப்பதில்லை.
மேலும் இவர் 30.05.2016 இல் இருந்து இன்று வரை எந்தவித முன் அனுமதியின்றி விடுமுறையில் உள்ளார். இதனால் பராமரிப்பு கிளையின் பணிகளை வினைத்திறனுடன் ஆற்ற முடியவில்லை. கடந்த காலத்தில் இவ்வாறான விடுமுறை தொடர்பாக (பிரதி இணைத்துள்ளேன்) தங்களுக்கு முன்னிலை படுத்தியுள்ளேன். எனவே இவரின் ஒழுங்கீனமான நடத்தைகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதுடன், பராமரிப்பு பிரிவின் செயற்பாடுகளை செவ்வனே ஆற்றுவதற்கு எதுவாக தகுதியானஒருவரை நியமிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

A. Aran
.............................................
வேலைகள் பொறியியளாளர்.

திரு.ஜனாதீபனின் 30.05.2016 தினத்தய நடத்தைகளை நேரடியாக பார்வையிட்ட பராமரிப்பு பிரிவு பணியாளர்கள் ஒப்பமிட்டு உறுதிசெய்துள்ளார்கள்.

<u>பெயர்</u>    <u>ஒப்பம்</u>

<u>நிரந்தர பணியாளர்கள்</u>

சுதர்சன்

ஜனகன்

ஜெயகிருஷ்ணா

<u>தற்காலிகபணியாளர்கள்</u>

கிருசாஜி

மயூரன்

தனஞ்செயன்

கேசவன்

சூரியகாந்

சஞ்ஜீவன்

விதுசன்

ஜெயசீலன்

பிரதீபன்